<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி உதவித்தொகை – பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) வழங்க உயர் திறன் ஊக்கத்திட்டம் – அரசாணை (நிலை) எண்.90, நாள் : 10.10.2024–க்கு திருத்தம் மேற்கொள்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–3)துறை</u>

அரசாணை (நிலை) எண்.5

நாள் : 09.01.2025,
குரோதி வருடம்,
மார்கழி மாதம் 25–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2055.
படிக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.90, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–3)துறை, நாள் : 10.10.2024.

------

<u>ஆணை</u>:–

அரசாணை (நிலை) எண்.90, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–3)துறை, நாள் : 10.10.2024–க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

<u>திருத்தம்</u>

மேற்படி அரசாணையின் இணைப்பில், பத்தி 7–இல் உள்ள,

III. சேர்க்கை பெறப்பட்டபின், அப்பயிற்சிக்கான கட்டண விவரங்கள் மற்றும் நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரங்களைப் பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெற்று ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு இணையதளத்திலும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

IV. பயிற்சி நிறுவனத்தின் கட்டண விவரங்கள் மற்றும் வங்கி கணக்கு விவரங்கள் இணையதளத்தில் பெறப்பட்டவுடன், அவ்விவரங்கள் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் சரிபார்க்கப்பட்டு, மாணவரின் பயிற்சிக்கானக் கட்டணங்கள் பயிற்சி நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

என்ற சொற்றொடர்களுக்கு பதிலாக பின்வருமாறு படிக்கப்பட வேண்டும்.

III. சேர்க்கை பெறப்பட்டபின், அப்பயிற்சிக்கான கட்டண விவரங்களை பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெற்று ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

IV. பயிற்சி நிறுவனத்தின் சேர்க்கை மற்றும் கட்டண விவரங்கள் இணையதளத்தில் பெறப்பட்டவுடன், அவ்விவரங்கள் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் சரிபார்க்கப்பட்டு, மாணவரின் பயிற்சிக்கானக் கட்டணங்கள் மாணவரின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் (Direct Benefit Transfer).

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 600 009.

நகல்
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
செயலாளரின் தனிச் செயலர், சென்னை– 600 009.
நிதி(ஆதி(ம)பந)த்துறை, சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்